சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 22 (LW- 38 ) | நாள் | 25.06.2025 |
| பெயர் | அஜய்சர்மா | தொழில் | மருத்துவர் |
| தந்தை பெயர் | அழகுசாமி | வயது | 32 yrs/M |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | கும்பகோணம். |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது கும்பகோணத்தில் உள்ள மெட்வே தனியார் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.03.2024 அன்று இரவு சுமார் 11.15 மணியளவில் சத்யா என்ற 25 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் இரண்டு கைகளிலும் வெட்டுக்காயங்களுடன் சிகிச்சைக்காக வந்தார். அவரை விசாரித்ததில் பிளம்பிங் வேலை செய்யும் இடத்தில் இயந்திரத்தில் கைப்பட்டு காயம் ஏற்பட்டதாக சொன்னார். அவரை சிகிச்சை அளிப்பதற்காக உள்நோயாளியாக அனுமதித்தேன். பிறகு அவரை பரிசோதனை செய்தததில் அவருக்கு ஆழமான வெட்டுக்காயமாக இருந்ததாலும் நரம்புகள் வெட்டப்பட்டிருந்ததாலும் எலும்பு சிகிச்சை நிருணர் திரு. அலெக்ஸ் மோசஸ் என்ற மருத்துவரை அழைத்து சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்தேன். அவருக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மறுநாள் காலை தனக்கு அதிக வேலை இருப்பதால் வேறு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொள்வதாக சொன்னதாலும் அவரை டிஸ்சார்ஜ் செய்து அனுப்பிவிட்டோம். அந்த

Ajay LW74963

டிஸ்சார்ஜ் சம்மரி **அசாஆ 32** ஆகும். இந்த ஆவணம் நீதிமன்ற வழக்கு கோப்பில் காணப்படவில்லை என்றும் சாட்சி தற்போது எடுத்து வந்துள்ளார் என்றும் அது ஜெராக்ஸ் நகலாக இருக்கிறது என்றும் குறியீடு செய்வதில் ஆட்சேபணை செய்யப்பட்டது. எனவே ஆட்சேபணைக்குட்பட்டு அசாஆ 32 ஆக குறியீடு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக மயிலாடுதுறை காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மெட்வே மருத்துவமனையில் உரிமையாளர் டாக்டர் பழனியப்பன் சென்னையில் உள்ளார். எங்கள் மருத்துவமனையில் பணிபுரிபவர்களுக்கு பணிபதிவேடு உள்ளது. 20.03.2024 அன்று முதல் விசாரணையில் சொன்னதுபோல் சத்யா என்ற நபர் சிகிச்சைக்கு வந்தபோது நான் தான் பணியில் இருந்தேன் என்பது பணிபதிவேடு மற்றும் Duty Registerல் உள்ளதா என்றால் உள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்த DSP பணிபதிவேடு மற்றும் Duty Register ஆகியவற்றை பார்வையிட்டரா என்றால் பார்வையிட்டார். எங்களிடம் சிகிச்சைக்கு வந்த நபர் சத்யா தான் என்பதற்கு எங்களுடைய அட்மின் டிப்பார்மெண்ட்டில் அவருடைய ஆதார் உள்ளிட்ட விவரங்களை தரவேண்டும். அட்மின் டிப்பார்மெண்டை DSP விசாரித்தாரா என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சத்யா என்ற நபர் 20.03.2024 அன்று என்னிடம் சிகிச்சைக்கு வரவில்லை என்றாலும் நான் அலெக்ஸ் மோசஸ் என்ற மருத்துவரை வரவழைத்து சிகிச்சை தரவில்லை என்றாலும் மறுநாள் காலையில் சத்யாவை நாங்கள் டிஸ்சார்ஜ் செய்யவும் இல்லை என்றால் சரியல்ல. என்னை விசாரித்தபோது அசாஆ 32 ன் நகலை என்னிடமிருந்து DSP பெற்றுக்கொண்டார். நான் அவ்வாறு தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசாஆ 32 ஆவணம் எங்கள்

மருத்துவமனையின் உரிமையாளர் காவல் துறை உயரதிகாரிகளுக்கு நெருக்கமானவர் என்பதால் அவர் ஆலோசனைப்படி காவல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்கள் தரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும் எனது உரிமையாளர் கேட்டுகொண்டபடி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

23/6/23

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

அரசு தரப்பு சாட்சி 23 (LW- 41 ) நாள் 25.06.2025

பெயர் வெங்கடசுப்ரமணியம் தொழில்

தந்தை பெயர் அருணோதயம் வயது 40

கிராமம் மயிலாடுதுறை தாலுக்கா புதுக்கோட்டை

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.03.2024 அன்று காலை தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மயிலாடுதுறை அரசு மருத்துவமனயில் இருந்து மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சரவணன், த/பெ. சுப்ரமணியம் வயது 29 என்ற நபர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். அவரை பரிசோதித்து பார்த்ததில் அவரது இடது கை மணிக்கட்டுக்கு மேல் ஒரு வெட்டுக்காயம் இருந்தது. விரல்கள் அசையமுடியாமல் இருந்தது. வலது கை ஆள்காட்டி விரல் மற்றும் நடுவிரலில் காயம் இருந்தது. ஆள்காட்டி நுனி விரல் துண்டாகியிருந்தது. மேலும் பரிசோதித்தபோது சதைநார் வெட்டுக்காயம் ஏற்பட்டிருந்தது. அதற்கு அறுவை சிகிச்சை செய்து சிகிச்சை செய்து 27.03.2024 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். நான் அளித்த காயச்சான்று **அசாஆ 33** ஆகும். விபத்து பதிவேட்டின் நகல் **அசாஆ 34** ஆகும்.

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்று **அசாஆ 35** ஆகும். இது சம்பந்தமாக காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**5 முதல் 8 குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

21.03.2024 அன்று காலை 8.00 மணியளவில் நான் சரவணனை அறுவை சிகிச்சை அரங்கிற்கு வருவதற்கு முன்பு பார்த்தேன். அசாஆ 34 என்னால் எழுதப்படவில்லை என்றால் சரிதான். அசாஆ 35 ஆவணத்தில் 20.03.2024 அன்று நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் அரிவாளால் தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் ஆல்கஹால் ஆதிக்கத்தில் இருந்தார் என்ற விவரமும் உள்ளது என்றால் சரிதான். காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆயுதம் எதையும் காட்டி என்னை விசாரிக்கவில்லை. சரவணனுக்கு ஏற்பட்ட காயங்கள் கூர்மையான எந்த பொருளாலும் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். மறுவிசாரணை இல்லை.

சாட்சிக்கள் முதன்மை சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 24 (LW-42 ) | நாள் | 25.06.2025 |
| பெயர் | கலைச்செல்வி | தொழில் | உதவி மருத்துவர் |
| கணவர் பெயர் | ராஜா | வயது | 48 |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | மயிலாடுதுறை |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.03.2024 அன்று அஜீத்குமார், த/பெ. லோகநாதன் 22 வயது, என்பவரின் உடல் பிரேத பரிசோதனை செய்வதற்காக தலைமைக்காவலர் தனபால் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதை ஏற்று 21.03.2024 அன்று காலை 10.40 மணிக்கு நானும் டாக்டர் வீரசெல்வன் இருவரும் சேர்ந்த மருத்துவ குழுவினாரால் பிரேதம் பார்க்கப்பட்டது. அப்போதும் பிணவிறைப்பு தன்மையுடன் இருந்தது. பிரேத பரிசோதனை 11.00 மணியளவில் தொடங்களப்பட்டது. நடுத்தர உடலமைபுடன் கூடிய சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஆண் உடல் மல்லந்த நிலையில் படுக்க வைக்கப்பட்டிருந்து. இரு கைகளும் பக்கவாட்டில் இருந்தன. தலை, முகம், கழுத்து ஆகிய இடங்களில் பல்வேறு விதங்களில் பல்வேறு அளவுகளில் பல வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. தலை, முகம், மற்றும் கழுத்தில் உள்ள அனைத்து தசைகளும் எலும்புகளும் கண், காது மற்றும் மூக்கு, வாய் போன்ற உறுப்புகளும் மிகவும் சிதைந்த நிலையில் காணப்பட்டன. ரத்தம்

Rafaudo 25/6/25

உறைந்த நிலையில் காணப்பட்டது. அதுமட்டுமல்லாமல் இடது கை மணிக்கட்டு அருகில் பின்புறமாக 8x2x1 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம், இரண்டாவது வலது முட்டியில் 8x2x1 செமீ அளவில் ஒரு வெட்டு காயமும் முன்றாவதாக வலது முட்டிக்கு கீழே 3x1x0.5 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயமும் காணப்பட்டது. மற்ற இடத்தில் எந்தவொரு எலும்பு முறிவும் இல்லை.

**உட்புற ஆய்வில்**

உள்ளுறுப்புகள் இரைப்பை, குடல், கல்லீரல், கணையம், சிறுநீரகம் ஆகியவை சிவந்த நிலையில் காணப்பட்டது. இரத்தம், இரைப்பை, சிறுகுடல், கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றின் மாதிரிகள் ரசாயன பரிசோதனைக்காக தஞ்சாவூர் அனுப்பப்பட்டது. பிரேத பரிசோதனை நண்பகல் 12.05 மணிக்கு முடிக்கப்பட்டது. என்னால் வழங்கப்பட்ட பிரேதபரிசோதனை அறிக்கை **அசாஆ 36** ஆகும். அதில் நானும் டாக்டர் வீரச்செல்வனும் கையொப்பம் செய்தோம்.

T.No. 870/2024/TAN/TAX, H/592/2024, Dated: 18.04.2024 என்ற அறிக்கையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளில் ரசாயன பகுப்பாய்வு அறிக்கைப்படி இரைப்பை சிறுகுடல் மற்றும் அதில் இருந்தவை ஈரல், சிறுநீரகம் மற்றும் மாதிரிகள் அதில் எந்தவிதமான ஆல்கஹால் அல்லது விஷத்தன்மை கொண்ட பொருட்களோ கண்டறியப்படவில்லை.

**இரத்த மாதிரிகள்**

RT.No.60017/2024, TAN/SER/06/2024, Dated: 30.05.2024 என்ற அறிக்கையில் இரத்தம் தோய்ந்த துணி 10.04.2024 அன்று பெறப்பட்டுள்ளது. அதில் உள்ள இரத்தம் B Group என்று உள்ளது.

**இறப்பிற்கான காரணம்**

சிதைந்த தலையில் ஏற்பட்ட வெட்டுக்காயங்களினால் ஏற்பட்ட

Ralaniels
25/6/25

அதிகப்படியான இரத்தப்போக்கே இறப்பிற்கான காரணம் என்று நாங்கள் சான்று வழங்கியுள்ளோம். இது சம்பந்தமாக மயிலாடுதுறை காவல் துணைக்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**5 முதல் 8 குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**மற்ற குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

25/6/25

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்க, அதனை என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவர் என் முன்பு ஆணையின் பேரில் தட்டச்சு எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

25/6/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட  மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 25 (LW-43) | நாள் | 25.06.2025 |
| பெயர் | வீரச்செல்வன் | தொழில் | - உதவி மருத்துவர் |
| தந்தை பெயர் | டா. சுப்ரமணியன் | வயது | → 35 |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | - மயிலாடுதுறை |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் நான் உதவி மருத்துவராக வேலை செய்கிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக இறந்த அஜித்குமார்,த/பெ. லோகநாதன், வயது 28 என்பவரின் சடலத்தை சடலக்கூறாய்வு செய்யும் குழுவில் நானும் மருத்துவர் கலைச்செல்வியும் இடம்பெற்றிருந்தோம். நாங்கள் இருவரும் சேர்ந்து தான் 21.03.2024 அன்று காலை 10.40 மணிக்கு சடலத்தை பார்வையிட்டு 11.00 மணிக்கு தொடங்கி 12.05 மணிக்கு சடலக்கூறாய்வை முடித்தோம். அசாஆ 36ல் கண்டுள்ள விவரங்கள் நானும் மருத்துவர் கலைச்செல்வியும் சேர்ந்து எழுதி இருவரும் கையொப்பம் செய்துள்ளோம். நாங்கள் இருவரும் சடலக்கூறாய்வு செய்து ஆய்வறிக்கைகள் பெற்று மருத்துவ கருத்துரையோடு அசாஆ 36 வழங்கியுள்ளோம்.

குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு ... ஒப்புக்கொள்ளப்பட்டது.

மயிலாடுதுறை

Dr. S. VEERASELVAN 25/6/25